بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் 11.05.2018அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் எடுத்துச் சொல்லவிருக்கிற சஹபாக்களுள் முதலில் ***அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ்*** பற்றி கூறப்போகிறேன். அவர் உமேமா பின்த் அப்தில் முத்தலிப் அவர்களின் மகன் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பெரியம்மா ஆவார்கள். இவ்வாறு அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பெரியம்மாவின் மகன் ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அர்க்கம் உடைய வீட்டிற்குச் செல்லும் முன்னரே இவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார். அர்க்கம் உடைய வீடு, அர்க்கம் பின் அர்க்கம் என்ற புதிய முஸ்லிமின் வீடாக இருந்தது. அங்கு முஸ்லிம்கள் ஒன்று கூடினர். மக்காவிற்கு சற்று தொலைவில் இருந்தது. மார்க்கத்தை கற்கவும் இறை வணக்கம் செய்யவும் அவர்களின் தலைமையகமாக இருந்தது. அதனால்தான் அது தாருஸ் ஸலாம் – அமைதியின் வீடு என்றும் பெயர் பெற்றது. மூன்று வருடங்கள் வரை மக்காவில் அது தலைமையகமாக இருந்தது. அங்கிருந்து அமைதியாக இறைவணக்கம் செய்து வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சபையும் அங்கு கூட்டப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு முஸ்லிம்கள் பகிரங்கமாக வெளியில் வரத் தொடங்கினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்விடத்தில் இஸ்லாத்தை தழுவியவர்களின் கடைசி நபராக இருந்தார்கள். எவ்வாறிருப்பினும் அது தலைமையகமாக ஆவதற்கு முன்னரே ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜிஹாஷ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்.

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்: பனு ஜஹ்ஷ் பின் ரியாப் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தபோது அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் அவரது வீட்டை அமர் பின் ஹம்ஸாவிடம் விற்று விட்டார். இந்த செய்தி மதீனாவிலிருந்த அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களுக்கு வந்த போது அவர் இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அதுபற்றி கூறினார்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ்வே! இதற்கு பகரமாக அல்லாஹ் உமக்கு சுவர்க்கத்தில் ஒரு மாளிகையை தருவதில் உமக்கு திருப்தியில்லையா? என்று கூறினார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், ஏனில்லை? அல்லாஹ்வின் தூதரே! என்றார். நான் அதனையே விரும்புகிறேன். எந்த இடங்களை நீர் விட்டு விட்டு வந்தீரோ அதற்குப் பகரமாக ஜன்னத்தில் மாளிகை கிடைக்கும். அது உங்களுக்கு அங்கு ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நஹ்ஸாவின் பள்ளத்தாக்கிற்கு அனுப்பினார்கள். இது பற்றி நூல்களில் இவ்வாறு வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஷா தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷிடம் கூறினார்கள்: நீங்கள் காலையில் உம்முடைய ஆயுதங்களை தரித்துக் கொண்டு வருக. நான் உம்மை ஓரிடத்திற்கு அனுப்பப் போகிறேன். இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சுபுஹ் தொழுது முடிந்ததும் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்கள் வில், அம்பு மற்றும் கேடயத்துடன் எதிர்பார்த்து நின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உபை பின் கஅபை அழைத்து ஒரு கடிதம் எழுதுமாறு கூறினார்கள். கடிதம் எழுதப்பட்டதும் அதனை வாங்கி அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷிடம் கொடுத்து, நான் உம்முடைய தலைமையில் உம்மை கண்காணிப்பவராக நியமித்து ஒரு கூட்டத்தினரிடம் அனுப்புகிறேன்.

வரலாற்றில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் இப்படைக்கு தலைவராக உபைதா பின் ஹாரிஸிடம் ஒப்படைத்திருந்தார்கள். புறப்படும் முன் அவர் விடை பெறுவதற்காக வீட்டிற்குச் சென்றபோது அவரது பிள்ளைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழுதனர். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷை அமீர் ஆக்கி அவ்விடத்திற்கு அனுப்பினார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷை அனுப்பும்போது அவருக்கு அமீருல் முஃமினீன் என்ற பட்டத்தை சூட்டினார்கள். சீரத்துல் ஹல்பிய்யாவில் இது குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு அப்துல்லாஹ் ஜஹ்ஷ் அவர்கள்தான் இஸ்லாமிய வரலாற்றில் அமீருல் முஃமினீன் என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்ட முதல் மனிதர் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜிரி 2 –ல் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷிடம் ஒரு கடிதம் கொடுத்து நகலாவுக்கு அனுப்பினார்கள். அக்கடிதத்தை இரண்டு நாட்கள் கழித்துதான் திறக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் இரண்டு நாட்கள் கழித்து திறந்து பார்த்தபோது அதில் இவ்வாறு எழுதி இருந்தது. நீங்கள் நக்லாவில் தங்குங்கள். குறைஷிகளின் நிலவரங்கள் குறித்து எனக்கு தகவல் கொடுங்கள். தற்செயலாக அவர்கள் அங்கு சென்றபோது சிரியா சென்று வியாபாரம் முடித்து ஒரு கூட்டம் வந்து அங்கு தங்கியது. அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் தங்களது சொந்த அனுமானத்தின் பேரில் தானே முடிவு செய்தவாறு அவர்களுடன் தாக்குதல் தொடுத்தார்கள். இதன் விளைவாக மறுப்போரின் ஒருவர் அமர் பின் அல் ஹஜ்ரமி கொல்லப்பட்டார். இருவர் கைது செய்யப்பட்டனர். போரில் கிடைத்த பொருள்களையும் அவர்கள் கைப்பற்றினர். அவர்கள் மதீனா வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறியபோது அன்னார் மிகவும் கோபம் கொண்டார்கள். உம்மை சண்டையிட அனுமதி தரவில்லையே? என்று கூறினார்கள். மேலும் போர் செல்வங்களையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

புகாரியில் ஒரு ஹதீஸை விரிவுரை செய்தவாறு ஹஸ்ரத் செய்யதுல் அப்துல் ஜைனுல் ஆபிதீன் ஷா சாஹிப் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய செயலின் விளைவுகளைப் பற்றி கூறுகிறார். சம்பவத்திலிருந்து தெரிய வருவதாவது, அவர் எந்த நோக்கத்துக்கு அனுப்பப்பட்டாரோ அப்பணி முழுமையாக நிறைவேறியது. அவர்கள் கைதிகள் மூலமாக மக்கத்து குறைஷிகளின் செயல்பாடுகளைக் குறித்து உறுதியான தகவல்களைப் பெற்று விட்டார்கள். அதர்மியின் கோத்திரத்தாருக்கு நடந்த நிகழ்வு ஒரு தற்செயலாக தொடர் நிகழ்வாகும். சில வரலாற்று ஆயவாளர்கள், அந்த கூட்டத்தின் அசல் நோக்கம் அதர்மியைச் சார்ந்த கூட்டத்தார் மூலம் அபூ ஸுஃப்யான் பின் ஹரப் தலைமையில் செல்லும் கூட்டத்தின் அசல் நோக்கம் மற்றும் மக்காவாசிகளின் திட்டம் என்ன என்று அறிவதாகவே இருந்தது. அந்த நோக்கம் நிறைவேறியது. அந்த சின்னஞ்சிறு கூட்டத்தை தமது பிடியில் கொண்டு வர வேண்டும் என்று அன்னார் நினைத்திருப்பார்கள் என்பது மிகவும் தூரமான ஓர் எண்ணமாகும். மக்கத்து குறைசியின் யுத்த ஏற்பாடுகளை அறிவதுதான் அவர்களின் நோக்கமாக இருந்தது. அவர்கள் கோத்திரத்தின் பொருட்களை கொள்ளையடிப்பதை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பிச் செல்வதையே போதுமானதாகக் கருதினார்கள்.

வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது: அல்லாஹ் மற்றும் ரஸூலின் மீது கொண்ட நேசம் அவர்களை உலகை விட்டு தன்னிறைவு பெற்றவர்கள் ஆக்கி விட்டது. அவர்களுக்கு எதாவது நோக்கம் இருக்கும் எனில் அது தனது பிரியமான உயிரை இறை வழியில் அர்ப்பணித்து இறை திருப்தியை தேடுவதாகவே இருந்தது. இந்த வகையில் அவர்களின் ஆசை நிறைவேறியது. அவர்களுக்கு அல்லாஹ்வின் வழியில் காதுகளை வெட்டப்பட்டவர்கள் என்ற சொல்லுக்கு உரியவர்கள் ஆனார்கள். இது அவர்களை பற்றிய தனிச் சிறப்பு மிக்க அடையாளமாக இருந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷின் துஆ எவ்வாறு நிறைவேறியது என்பது பற்றி வருகிறது. அன்னாரது ஷஹாதத்திற்கு முன் அவர்களின் ஒரு துஆ பிரபல்யமாக உள்ளது.

இஸ்ஹாக் பின் ஸ்அத் பின் அபீ வக்காஸ் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் எனது தந்தையாகிய ஸஅதிடம் கூறினார்கள். அல்லாஹ்விடம் துஆ செய்வோம் வாருங்கள். பிறகு இருவரும் ஒருபுறம் சென்றார்கள். முதிலின் சஅத் அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நாங்கள் நாளை எதிரிகளை சந்திக்கும்போது கடுமையாக தாக்குபவரை நான் சந்திக்க வேண்டும். அவர்கள் பற்றிய ஒரு திகில் மிகைத்து இருக்க வேண்டும். அத்தகையவருடன் நான் சண்டையிட வேண்டும். எனது வழியில் அவரை கொன்று அவரது ஆயுதங்களை கைப்பற்ற வேண்டும். இதற்கு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் ஆமின் கூறினார். அதன் பிறகு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் துஆ செய்தார். அல்லாஹ்வே! நாளை என் முன் வரக்கூடியவர் கடுமையான தாக்குதல் தொடுப்பவராக இருக்க வேண்டும். அவரது திகில் அதிகமாக இருக்க வேண்டும். அத்தகையவரை நான் உனக்காக கொல்ல வேண்டும். அல்லது அவர் மிகைத்து என்னைக் கொன்று எனது மூக்கு காது ஆகியவற்றை அறுக்க வேண்டும். இந்நிலையில் நான் உன்னிடம் வர வேண்டும். நீ என்னிடம் கேட்க வேண்டும். அப்துல்லாஹ்வே! எவரது வழியில் உனது மூக்கும் இரு காதுகளும் வெட்டப்பட்டன? நான், உன்னுடையதும் உன் ரஸூலின் வழியில் அறுக்கப்பட்டன என்று கூறுவேன். அதற்கு பதிலாக நீ உண்மை கூறினாய் என்று இறைவா! நீ கூற வேண்டும்.

சஅது கூறுகிறார்: என் துஆவை விட அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய துஆ சிறந்தது. எனவே நான் கடைசி நாளில் அவரது மூக்கு காதுகளை பார்த்தேன். அவை வெட்டப்பட்டிருந்தன.

ஹஸ்ரத் அம்ஸா பின் முத்தலிப் பின் அப்தில்லாஹ் பின் அன்தக் உடைய அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹதுக்கு புறப்பட்ட அன்று செல்லும் வழியில் இரவு ஷேன்ஹைன் என்ற இடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் உம்மே ஸல்மா பொரித்த கறியை வழங்கினார்கள். அதனை அன்னார் உண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபிஸ் என்ற ஒரு பானத்தையும் வழங்கினார்கள். அதனை அவர்கள் பருகினார்கள்.

அடுத்து இன்னொரு பானத்தை வழங்கினார்கள். எனது கருத்தின்படி அது ரவை கஞ்சி போன்ற ஒன்றாகும். ஒருவர் அந்த பாத்திரத்தை எடுத்து சிறிது அருந்தினார். பிறகு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களிடம் தரப்பட்டது. அன்னார் அதை முழுவதும் குடித்து முடித்து விட்டார்கள். ஒருவர் அதனை எனக்கும் தாருங்கள் என்றார். நாளை காலை நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்று தெரியுமா? என்று அவர் கூறினார். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், எனக்கு தெரியும். அல்லாஹ்விடம் இதே நிலையில் சென்று சந்திப்பதை விரும்புகிறேன். நன்கு குடித்து உண்ட நிலையில் அவனை சந்திக்க விரும்புகிறேன். எனது அதிக அன்பிற்குரியவனை பசி தாகத்துடன் சந்திக்க விரும்பவில்லை என்று கூறினார்கள்.

சஹாபாக்களின் இறை நேசம் மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தது. அதற்காக அவர்களின் தயாரிப்பும் கூட வியக்கத்தக்கதாகவே இருக்கிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் இருவரும் ஒரே கபரில் அடக்கம் செய்யப்பட்டனர். ஹஸ்ரத் ஹம்ஸா ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய மாமா ஆவார். ஷஹாதத்தின்போது அவரது வயது **40** –ஐ விட சற்று அதிகமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்கள் விட்டுச் சென்ற பொருள்களுக்கு பாதுகாவலராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது மகனுக்கு கைபரின் பொருள் வாங்கிக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மிகவும் சிறந்த ஆலோசனை கூறுபவராக இருக்கின்ற சிறப்பும் பெற்றிருந்தார். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் பத்ர் பற்றி சஹாபாக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அதில் இவரும் இருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர்க்களத்திலிருந்து திரும்பிய சம்பவத்தைக் கூறும்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய சகோதரியின் சம்பவத்தை கூறுகிறார்கள். வரலாற்றில் இவ்வாறு வருகிறது: உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு தனது உயர்ந்த நல்லொழுக்கத்தையும் விவேகத்தையும் காட்டினார்கள். மக்களிடம் எவ்வாறு கனிவும் அனுதாபமும் காட்டினார்கள் என்பதை இந்தக் கடிதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அந்த யுத்தத்தின் மூலம் சஹாபாக்களின் மகத்தான தியாகமும் தெரிய வருகிறது.

இரண்டாவது சஹாபி ***கஅப் பின் ஸைத்***. அவரது பெயர் கஅப் பின் ஸைத் பின் கைஸ் பின் மாலிக் ஆகும். இவர் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் கஅப் பத்ர் போரில் கலந்து கொண்டிருந்தார்கள். அகழ் போரில் ஷஹீதாக்கப்பட்டார்கள். அன்னார் உமைய்யா பின் ரபியா பின் ஸகர் உடைய அம்பு அன்னார் மீது பட்டது. அவர் பஷரே மஃமூனா என்ற இடத்தில் நடந்த ஷஹாதத்துகளில் இவர்கள் மட்டுமே தப்பித்தார். அதாவது அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கோத்திரத்தாரின் வேண்டுகோளை ஏற்று 70 சஹாபாக்களை அனுப்பினார்கள். அதில் அதிகமான பேர் குர்ஆனை மனனம் செய்தவர்களும் நல்ல ஓதக் கூடியவர்களும் ஆக இருந்தனர். அவர்கள் இந்த சஹாபாக்களை ஏமாற்றி ஷஹீதாக்கினார்கள். ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் தவிர, அன்னார் மட்டும் உயிரோடு தப்பிக்க காரணம் அவர் ஒரு மலையின் மீது ஏறி விட்டார்கள். சில அறிவிப்புகளின்படி குஃப்பார்கள் தாக்குதல் தொடுத்து அவரையும் கூட கடும் காயத்திற்கு உள்ளாக்கினர். காஃபிர்கள் அவர் இறந்து போனதாக கருதி விட்டுச் சென்று விட்டனர். ஆனால் அப்போது அவர்களுக்கு உயிர் இருந்தது. பிறகு அவர் மதீனா வந்தார். அதாவது அன்னார் பிழைத்துக் கொண்டார்கள்.

மூன்றாவது ***ஸாலிஹ் ஷுக்ரான்*** என்ற சஹாபி. இவர்களது பெயர் ஸாலிஹ் என்பதாகும். ஷுக்ரான் என்பது பட்டப் பெயர். இதன் மூலம் அவர் பிரபல்யமாக இருந்தார். ஸாலிஹ் ஷுக்ரான் அவர்கள் அப்துல்லாஹ் பின் அவ்ஃப் உடைய விடுதலை செய்யப்பட்ட அடிமை ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவரே தனது பணிக்காக விரும்பி வைத்திருந்தார்கள். அப்துர் ரஹ்மான் விலை கொடுத்து வாங்கினார்கள். சில அறிவிப்புகளின்படி அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் எந்த விலையையும் பெறாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காணிக்கையாக அவரை வழங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஸாலிஹ் ஷுக்ரான் பத்ர் போரில் கலந்து கொண்டார். இவர் அப்போது அடிமையாக இருந்தார். விடுதலை பெறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு பங்கு நிர்ணயிக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸாலிஹ் ஷுக்ரானை கைதிகளை கண்காணிப்பவராக நியமித்தார்கள். ஸாலிஹ் ஷுக்ரான் எந்த கைதிகளை கண்காணித்தார்களோ அவர்களிடமிருந்து பொருள் கிடைத்தால் அவர்களுக்கு அது போர்ச் செல்வத்தை விட அதிகமாகவே இருந்தது. அதாவது போர் செல்வத்திலிருந்து அவர்களுக்கு பங்கு கிடைக்கவில்லை. இருந்தும் கைதிகளை கண்காணித்ததில் அவர்களுக்கு போர் செல்வத்தை விட அதிகமான பொருள்கள் கிடைத்தன. பத்ர் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை விடுதலை செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் முஹம்மது ஸாதிக் கூறுகிறார்: ஹஸ்ரத் ஷுக்ரான் திண்ணைத் தோழர்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். திண்ணைத் தோழர் எப்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் ஷுக்ரானுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருந்தது. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்களின் வஃபாத்தின்போது அவர்களை குளிப்பாட்டவும், அடக்கவும் செய்யும் வாய்ப்பு கிடைத்திருந்தது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அவர்களது சட்டையுடனேயே குளிப்பாட்டப்பட்டனர். அவர்களின் கபரில் ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் பஹ்ல் பின் அப்பாஸ், ஹஸ்ரத் குஸ்ம் பின் அப்பாஸ், ஹஸ்ரத் ஷுக்ரான், ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹவஸி ஆகியோர் இறங்கி நின்றனர். ஹஸ்ரத் ஷுக்ரான் இதுபற்றி கூறுகிறார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கபரில் பட்டுத் துணியினால் ஆன ஒரு விரிப்பை விரித்தேன். சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பின்படி அது ஒரு சிவந்த நிற பட்டு விரிப்பாக இருந்தது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்தி வந்த விரிப்பாக இருந்தது.

ஹஸ்ரத் ஷுக்ரான் கூறினார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அதனை ஒருவர் போர்த்துவதையும் விரிப்பதையும் நான் விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை போர்த்தினார்கள். விரித்தார்கள். பல்வேறு போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஷுக்ரானை போர் பொருட்கள் மற்றும் ஆயுதங்கள், கால்நடைகளுக்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அச்சமயங்களில் அவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவராக இருந்தார்கள். அவர்களைப் பற்றி வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷுக்ரானின் மகனாகிய அப்துர் ரஹ்மான் பின் ஷுக்ரானை அபூ மூஸா அஷ்அலியிடம் அனுப்பினார்கள். உம்மிடம் ஒரு ஸாலிஹான மனிதராகிய அப்துர் ரஹ்மான் ஸாலிஹ் ஷுக்ரான் என்பவரை அனுப்புகிறேன். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாகிய ஷுக்ரான் என்பவரின் மகன் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவரிடம் ஒரு தந்தையைப் போன்று நடந்து கொண்டார்கள். எனவே இவரது தந்தையாகிய ஷுக்ரானின் மரியாதையை கவனத்தில் கொண்டவாறு இவருடன் நடந்து கொள்ளுங்கள்.

இஸ்லாம் இந்த அந்தஸ்தை அடிமைகளுக்கு வழங்கியது. அவர்களுக்கு விடுதலை கிடைத்தது மட்டுமின்றி அவர்களின் மகன்களும் கூட மரியாதையைப் பெற்றனர். ஹஸ்ரத் ஷுக்ரான் மதீனாவில் வாழ்ந்து வந்தார். அவரது ஒரு வீடு பஸ்ராவிலும் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் வஃபாத் ஆனார்கள்.

அடுத்து, மாலிக் பின் துக்ஷும் என்பவரைப் பற்றி குறிப்பிடுகிறேன். இவர் கிஸ்ராஜ் கோதிரத்தில் பனூ கனம் பின் அவ்ஸைச் சார்ந்தவர். அவரது ஒரு மகள் ஹுரையா. ஹஸ்ரத் மாலிக் பின் துக்ஷும் உக்பா உடன்படிக்கையில் இவர் கலந்து கொண்டாரா? இல்லையா? என்பதில் மார்க்க அறிஞர்களிடத்தில் கருத்து வேறுபாடு உள்ளது. இப்னு இஸ்ஹாக், மூஸா பின் உக்பா ஆகியோரின் கருத்தின்படி இவர் உக்பா உடன்படிக்கையில் கலந்து கொண்டார். ஒரு அறிவிப்பின்படி ஸுஹைல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு மரத்தின் புதர்களின் அடியில் கிடைத்தார். அவரைப் பிடித்து அவரது கையை கழுத்துடன் சேர்த்து கட்டப்பட்டார்.

சஹீஹ் புகாரியில் இந்த அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் இக்பான் பின் மாலிக் என்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அன்ஸாரி சஹாபி ஆவார். இவர் பத்ரிலும் கலந்து கொண்டார். இவர் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார். அல்லாஹ்வின் தூதரே எனது கண் பார்வை பலவீனமாகி விட்டது. எனது சமுதாயத்துக்கு தொழுகை நடத்துகிறேன். மழை வந்தால் அவர்களுக்கும் எனக்கும் நடுவில் ஓடையில் தண்ணீர் வெள்ளமாக ஓடுகிறது. நான் மஸ்ஜிதுக்கு போய் தொழுகை நடத்த முடியாது. எனவே, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் என் வீட்டுக்கு வந்து தொழுங்கள்.

அவர் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இருவரும் ஒரு நாள் காலைப் பொழுது விடியும்போது எனது வீட்டின் முன்பு நின்று அனுமதி கோரினர். நான் அனுமதி கொடுத்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டுக்குள் வந்தார்கள்; உட்காரவில்லை. மாறாக வீட்டுக்குள் எங்கே நான் தொழ வேண்டும் என்று கேட்டார்கள். நான் வீட்டின் ஒரு ஓரத்தைக் காட்டினேன். இங்கு நான் தொழ விரும்புகிறேன் என்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ நின்றார்கள். அல்லாஹு அக்பர் கூறினார்கள். நாங்களும் பின்னால் நின்றோம். ஸஃப் கூடியதும் அன்னார் இரண்டு ரக்அத் தொழுதார்கள். பிறகு ஸலாம் வாங்கினார்கள்.

அறிவிப்பாளர் கூறினார்: நாங்கள் அன்னாருக்கு ரொட்டியும் கறியும் கொடுப்பதற்காக நிறுத்தினோம். வீட்டில் அவர்களைத் தவிர முஹல்லாவின் வேறு சிலரும் வந்தார்கள். எல்லாரிடம் சேர்ந்ததும் ஒருவர் கூறினார். மாலிக் பின் துக்ஷும் எங்கே? காணவில்லை. அதில் ஒருவர் கூறினார். அவர் நயவஞ்சகர். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது அன்பு கொள்ளவில்லை. ஒருவேளை அவர்கள் வாழ்ந்த பகுதியைச் சேர்ந்வராக இருக்கலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவ்வாறு கூற வேண்டாம். அவர் லாயிலாஹ இல்லல்லாஹ்வை ஒப்புக் கொண்டுள்ளதை நீர் பார்க்கவில்லையா? அதில் அல்லாஹ்வின் திருப்தியைத்தான் நாடியுள்ளார் என்று கூறினார்கள்.

அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் மாலிக் பின் துக்ஷும் பற்றி தவறாகப் பேசப்பட்டபோது, என்னுடன் இருப்பவர்களை ஒருபோதும் தவறாக பேசாதீர்கள் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்குப் பிறகு மதீனா திரும்பியபோது ஓரிடத்தில் தங்கினார்கள். அவர்களுக்கு கேடு விளைவிக்கும் பள்ளிவாயில் குறித்த வஹி இறங்கியது. அன்னார் மாலிக் பின் துக்ஷும் மற்றும் உதுமான் பின் ஹதி இருவரையும் கூப்பிட்டு அனுப்பினார்கள். இருவரையும் அந்த கேடு விளைவிக்கும் பள்ளிவாயிலுக்குச் செல்லுமாறு கூறினார்கள். மாலிக் பின் துக்ஷும், உஸ்மான் பின் ஹதி இருவரும் ஸாலும் கோத்திரத்தாரிடம் சென்றார்கள். ஏனெனில் அது மாலிக் பின் துக்ஷும் உடைய கோத்திரமாக இருந்தது. மாலிக் பின் துக்ஷும் உஸ்மான் இடம் கூறினார்கள். எனக்கு சிறிது அவகாசம் கொடுங்கள். நான் வீட்டில் இருந்து நெருப்பு எடுத்து வருகிறேன் என்று கூறி அவர் சில பேரீச்ச மரப் பட்டைகளில் நெருப்பை மூட்டி எடுத்து வந்தார். இருவரும் மஸ்ஜித் ளிரார் என்ற கேடு விளைவிக்கும் பள்ளிவாயிலுக்குச் சென்றனர். அறிவிப்பின்படி மக்ரிப் மற்றும் இஷாவுக்கு இடையில் சென்று சேர்ந்தனர். அங்கு அதற்கு நெருப்பு வைத்து அதை பூமியோடு பூமியாக்கினார்கள். சிலரது தவறான எண்ணத்தின் காரணத்தால் இவர் தவறான வழியில் போய் விட்டார் என்று கருதினார்கள். இவரை நயவஞ்சகர் என்று கருதினார்கள். அவரேதான் நயவஞ்சகர்களின் தலைமையகத்தை அழிப்பவராக ஆனார்கள். அல்லாஹ்வின் கட்டளையின் படி அதனை அழிப்பவர் ஆனார்கள்.

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உணர்த்துவானாக. நம்மை ஆய்வு செய்பவர்கள் ஆக்குவானாக. அல்லாஹ்வின் கட்டளைகள் என்னவென்றும் அதனை எந்த அளவுக்கு நாம் நிறைவேற்றுகிறோம் என்றும் ஆய்வு செய்பவராக்குவானாக.

(முஅல்லிம் எம். நிஸாமுத்தீன்)

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 11.05.2018
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516